# 15
# மகிமையாய் மரிப்பது எப்படி?
## How to Die triumphantly

இறப்பு என்பது வாழ்க்கையின் நிசங்களிலெல்லாம் நிசம். நாம் இங்கு இருக்கப்போவதில்லை; இங்கிருந்து போகப்போகிறோம். மரணத்தைவிட நிச்சயமானதும், மரிக்கும் நேரத்தைவிட நிச்சயமற்றதும் வேறில்லை. எனவே எப்பொழுது வேண்டுமானாலும் நேரிடக்கூடியதற்கு நாம் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேண்டும்.

''ஒருவனது பிறப்பு நாளைவிட இறப்பு நாள் நல்லது'' எனப் பகர்ந்தான் சாலொமோன் ஞானி (பிர 7:1). ''நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்'' எனப் பிரார்த்தித்தான் மோசே (சங் 90:12). ''நமது இறுதி நாளுக்காக எந்நாளும் ஆயத்தப்படவேண்டும்'' எனப் படிப்பித்தார் வேத வியாக்கியானி மேத்யு ஹென்றி. ''இறப்பதற்கு ஆயத்தப்படாதவன் சாதாரண முட்டாளல்ல; அவன் கிறுக்கன்'' எனப் பிரசங்கித்தார் C.H. ஸ்பர்ஜன்!

கிறிஸ்து இருந்ததுபோலவே நாமும் இவ்வுலகில் இருக்கிறோம். நாம் அவரைப் போலவே வாழவேண்டுமென வேதம் போதிக்கிறது. வாழ்வதற்கு கிறிஸ்துவே முன்மாதிரியென்றால் மாள்வதற்கும் அவரே முன்மாதிரி. அப்படியானால், நாமும் முப்பத்துமூன்று வயதில் ரோமச் சிலுவையொன்றில், எருசலேமிற்கருகில் மரிக்கவேண்டுமென்று பொருள்படாது! ஆனால் அவரது வாழ்விலும் மாள்விலும் அடிக்கோடுகளாக அமைந்த தத்துவங்களை நாம் பின்பற்றவேண்டும். சிலுவையிலிருந்து அவர் மொழிந்த ஏழு வார்த்தைகள் மகிமையான மரணத்திற்கு வழிகாட்டிகளாம்.

### *1. பிறரிடம் கனிவுடனிருங்கள்.*

*''பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே!''* (லூக் 23:34).

இயேசுவின் வாழ்க்கை முழுவதுமே மன்னிப்பின் சுபாவத்தினால் நிறைந்திருந்ததாலேயே தம்மைச் சிலுவையிலறைந்தவர்களுக்காய்



அவர் அவ்வளவு பெருந்தன்மையாய் ஜெபிக்க முடிந்தது. சரியாய் வாழ்பவன் சரியாய் மாள்வான். மக்கள்மீது இயேசு சாடியதும், அவர்களைச் சாட்டையால் அடித்ததுங்கூட உண்மையன்பின் வெளிப்பாடுகள்தான். ஸ்தேவான் தனது ஆண்டவரை அப்படியே பின்பற்றினான் (அப் 7:60).

''மரணமென்று ஒன்று இருக்கும் இவ்வுலகில் எவரையும் பகைக்க நேரமேது?'' என்று ஒருவர் கேட்டார்! முடிந்த அளவு இன்று இரக்கமாயிருப்போம்; நாளை நாம் இங்கு இல்லாமல் போகலாமே. ''சூரியன் அஸ்தமிக்குமுன் உங்கள் எரிச்சல் தணியட்டும்'' எனப் பவுல் எபேசு நகர்க் கிறிஸ்தவரை எச்சரித்தான் (எபே 4:26). கோபத்திலும், கசப்பிலும், வைராக்கியத்திலும் நமது வாழ்வு அஸ்தமிக்க வேண்டாம். மன்னிக்கப்பட்ட ஒரே காரணத்தினால் மக்கள் நுழைந்துள்ள நாட்டை நோக்கி விரைந்துகொண்டிருக்கிறோம். அப்படியானால் இப்பூவுலகில் புண்படுத்தப்பட்டு, மன்னிக்கப்படாமல் எவரையும் விட்டுச் செல்லலாமா? தவறிழைக்கப்பட்ட சகோதரனோடு ஒப்புரவாகுமுன் இவ்வுலகிலுள்ள பலிபீடத்திலேயே காணிக்கை செலுத்த வேண்டாமென இயேசு போதித்தாரே (மத் 5:23,24). நாம் அவரது நேரடிப் பிரசன்னத்தில் நிற்கும்போது அதிலும் குறைவாக எதிர்பார்ப்பாரோ?

அன்பு நிறைந்த இன்றைய வாழ்வே நியாயத்தீர்ப்பு நாளில் நமக்குத் தைரியமளிக்கும் உத்திரவாதம் (1 யோ 4:17). ''இரக்கம் செய்யாதவனுக்கு இரக்கமில்லா நியாயத்தீர்ப்பு கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன் இரக்கம் மேன்மைபாராட்டும்'' (யாக் 2:13).

புண்படுத்தப்பட்டவரிடம் உடனே விரையுங்கள். தவறிழைக்கப்பட்டவருடன் ஒப்புரவாகுங்கள். காரியங்களைச் சரிசெய்யுங்கள். உங்களுடையதல்லாதவற்றைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள். தொடுத்த வழக்குகளை வாபஸ் பெறுங்கள். தயங்காது மன்னிப்புக் கோருங்கள். கடந்த காலத்தை மறந்துவிடுங்கள். மன்னிக்கவேண்டிய கடன் இல்லாதிருக்கட்டும். மன்னிப்போர் மகிமையாய் மரிப்பர்!

### *2. ஆத்துமாக்கள் மீது கரிசனைகொள்ளுங்கள்.*

*''இன்று நீ என்னுடன் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்''* (லூக் 23:43).

இயேசுவின் வாழ்வில் ஆத்துமாதாயமே பிரதானப் பணியாயிருந் தது. தொலைந்துபோனோரைத் தேடவும் இரட்சிக்கவுமே தாம் வந்த தாய்த் திரும்பத் திரும்பக் கூறினார். உண்மை தேடி அலைந்தோருக் காய்த் தமது ஓய்வையும் தூக்கத்தையும் தியாகம் பண்ணினார். உன் னதம் நாடி அங்கலாய்த்தோருக்காய்த் தமது பயணத் திட்டங்களையே மாற்றினார். எங்கும் பாவிகளின் சிநேகிதனாயிருந்த அவர் சிலுவை யிலும் அப்படியே!

''பேராலயத்தில் இரு மெழுகுவர்த்திகளுக்கு நடுவில் அல்ல, நகரின் குப்பை மேட்டில் இரு கள்வர் நடுவில் சிலுவையில் இயேசு மரித்தார். எபிரெயு, லத்தீன், கிரேக்கு ஆகிய மூன்று மொழிகளில் எழுதினால்தான் யாவருக்கும் புரியும் எனுமளவு அவ்வித நடுச் சந்தியில் அவர் மரித்தார். அதுதான் பகடிகள் தூஷித்து, திருடர்கள் சபித்து, சேவகர்கள் சீட்டாடிக்கொண்டிருக்குமிடம். அங்குதான் இயேசு மரித்ததால் சபையினர் செல்லவேண்டியதும் அங்குதான். அதற்காகத்தான் இயேசு மரித்ததால் சபையினர் செய்யவேண்டியதும் அங்குள்ளோரைத் திருத்துவதும், திருப்புவதுமே!'' *(Pulpit Helps,* ஏப்ரல் '94).

கிறிஸ்துவை விசுவாசிக்கும்வரை எந்த மனிதனும் இறக்க ஆயத் தப்படவில்லை. அவன் விசுவாசித்தபின், கிறிஸ்தற்ற நித்தியத்திற் குள் விரைவோரைத் தடுத்து நிறுத்துவதைவிடப் பெரும்பணி அவ னுக்கு வேறில்லை.

செய்யவேண்டியதைச் செய்யாது விட்டது எனும் பாவமே (sin of omission) அச்செல்வந்தனை நரகத்திற்குள் இறக்கிற்று. தேவையி லும் துன்பத்திலும் வாடியோரைக் குறித்துக் கரிசனையற்று வாழ்ந் திருந்தான். மனந்திரும்பாத தனது ஐந்து சகோதரரிடம் லாசருவை அனுப்பும்படி அவன் ஆபிரகாமைக் கெஞ்சியதிலிருந்து, மிஷனரிப் பணி குறித்தும் அக்கறையற்றே அவன் வாழ்ந்தான் என்பது தெளி வாகிறது! (லூக் 16:27,28).

□ பிரியமானவர்களே, அழியும் ஆத்துமாக்களுக்காக விடாது விண்ணப்பிப்பதில் உங்கள் ''நேரம்'' (Time) செலவழிக்கப்படட்டும். தனது இரு குடிகார நண்பருக்காய் ஜார்ஜ் முல்லர் ஏறத்தாழ 40 ஆண்டுகள் ஜெபித்தாராம். அவரது அடக்க ஆராதனையில்தான் அவர்கள் மனந்திரும்பினார்கள் — வெளிநாடுகளுக்கு மிஷனரி களாகவும் புறப்பட்டுவிட்டார்கள். நமது ஜெபங்களும் கண்ணீர்களும் வீண்போவதில்லை; அவைகள் தேவனது கணக்கிலும் கலசத்தி யிலும் வைக்கப்பட்டுள்ளன (சங் 56:8).



□ கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரவசமாகப் பறைசாற்றுவதில் உங்கள் ''திறன்'' (Talents) செலவழிக்கப்படட்டும். உங்கள் பதவி, படிப்பு, பலம் யாவையும் இறைப்பணிக்காய் அர்ப்பணியுங்கள். மக் களை ஆசீர்வதிக்க எங்கெல்லாம் செல்ல முடியுமோ அங்கெல்லாம் செல்லுங்கள்; அவர்களை அழைத்துவர என்னெல்லாம் செய்ய முடி யுமோ அதுவெல்லாம் செய்யுங்கள். ''நான் இறந்தபின் எனது கல்ல றையில் பொறிக்க விரும்புவதெல்லாம் நற்செய்தியைச் சுமந்து செல்லும் இரு பாதங்களின் நினைவுச் சின்னமே'' என்று D.L. மூடி தனது இறுதி ஆசையைத் தெரிவித்தார்!

□ அருட்பணியின் பொருளாதாரத் தேவைகளுக்காய்த் தாராள மாய்ப் பயன்படும்படி உங்கள் ''பணம்'' (Treasure) செலவழிக்கப் படட்டும். பூச்சிக்கும், துருவுக்கும், திருடருக்கும் போய்விடாது மோட்சத்தில் உங்கள் சொத்து சேர்க்கப்படுவதற்கு இதுவே வழி (மத் 6:20). இறக்கும்போது நமக்கு இருக்கும் யாவையும் விட்டுச் செல்கிறோம்; நாம் கொடுத்துவிட்ட யாவையுமோ எடுத்துச் செல் கிறோம்!

உக்கிராணத்துவப் பொறுப்புகளில் உத்தமமாய் இருப்போரை நமது ஆண்டவர் பரலோகத்தில் ''நல்லது'' ''நல்வரவு'' என்று தடபுடலாக வரவேற்பார்! (மத் 25:21,23,24).

### *3. உங்கள் குடும்பத்தைக் கவனியுங்கள்.*

*'' அதோ, உன் மகன் ... அதோ, உன் தாய்!''* (யோ 19:26,27).

கிறிஸ்தவனின் கவனத்தில் அவனது குடும்பம் முக்கிய இடம் பெறவேண்டும். ''ஒருவன் தன் சொந்த மக்களையும், சிறப்பாய்த் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்'' என்று விவிலியம் அழுத்திக் கூறுகிறது (1 தீமோ 5:8). இந்த உணர்வே மூத்த மகனாயிருந்த இயேசுவுக்குத் தமது விதவையான(?) தாய்மீது அவ்வளவு கரிசனை தந்தது.

தனக்குத் தனது சகோதரர் தீமையே செய்திருந்தாலும், யோசேப்பு அவர்களுக்காகவும் அவர்கள் குடும்பங்களுக்காகவும் தனது மரணத் திற்குமுன் எகிப்தில் போதுமான வசதிகளைச் செய்து வைத்தான் (ஆதி 47:5,6; 50:19-22). அப்படியே தாவீதும், அவன் கடைசி மகனாயிருந்தும், தன் தகப்பன் வீட்டாருக்குத் தேவையானதைச் செய்துவைத்தான் (1 சாமு 22:1-4).

இறப்போருக்கு அது மகிமையான நாட்டிற்குள் நுழைவு; ஆனால் இருப்போருக்கோ — அதிலும் வாழ்க்கைத் துணைக்கும் பிள்ளை களுக்கும் — அது கண்ணீரும் தவிப்புந்தான். விதவைகளை விசாரிக் கிறவரென்றும், தந்தையற்றோருக்குத் தகப்பனென்றும் அறியப் படுமளவு கடவுளுக்கு இவர்கள்மீது கவலையுண்டு (சங் 68:5). குடும்பத்தின் எதிர்காலத்திற்குத் தேவையானவற்றைச் செய்ய எழு பது வயதுவரை காத்திராதேயுங்கள். அன்றன்றுள்ள அப்பத்திற்காய்ச் சம்பாதிக்கும் இன்றே ஜெபத்துடன் குடும்பத்தின் எதிர்காலத் தேவை களுக்கும் திட்டங்களை மேற்கொள்ளுங்கள். தேவன் பார்த்துக்கொள் வாரெனும் கவலையீன மனப்பான்மை திருவசனத்திற்கு எதிரானது (2 கொரி 12:14; நீதி 19:14).

சொத்துக்களைப் பங்கிடுவது குறித்த ஒரு சில வார்த்தைகள் இங்கு பொருத்தமாயிருக்கும். பாகப்பிரிவினையின் பாரபட்சத்தினால் பெற்றோர் இறந்தபின் சகோதர சகோதரிகளிடையே கடூரச் சண்டை கள் ஏற்படுகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை இதில் அதிகம் பாதிக்கப்படுவது பெண் பிள்ளைகளே. இது சட்டத்திற்குப் புறம் பானது, கிறிஸ்தவப் பண்பாட்டிற்கு முரணானது. பெண் பிள்ளைகள் இவ்விதம் மாற்றாந்தாய்ப் பிள்ளைகள்போல் நடத்தப்படுவதை தேவன் வெறுக்கிறார். சொல்லப்போனால், பலவீன பாண்டங்களா கிய அவர்களுக்குத்தான், ஆணாதிக்கம் நிறைந்த இவ்வுலகில் பிழைக்க, கூடுதல் ஆதரவு தரப்படவேண்டும் (1 கொரி 12:24,25).

தேவன் உங்களை ஆசீர்வதிக்கும்போது, உங்களது எளிய உற வினர்களது நலனுக்கும் நீங்கள் பொறுப்பு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். நெருங்கிய குடும்ப வட்டத்திற்கு வெளியே எனக்கு அக்கறையில்லையென்ற தன்னலம் தவறு. சமுதாயத்தில் உங்கள்



பதவியையும் செல்வாக்கையும் பயன்படுத்தி நலிந்த, ஏழ்மையான உறவினரை முன்னுக்குக் கொண்டுவாருங்கள். இவ்வித மனப்பான் மையைத் தேவன் கனம்பண்ணுகிறார் (எஸ்தர் 4:13,14). சவுல் தனது சித்தப்பா மகனையும், தாவீது தனது சகோதரியின் மகனையும் தங்கள் இராணுவங்களில் தலைவர்களாக்கினர் (1 சாமு 14:50; 1 நாளா 2:16; 2 சாமு 8:16). தேவையிலிருக்கும் பொருத்தமானோருக்கு இவ்விதம் உதவுவது நேர்மையின்மை அல்ல.

### *4. தேவனை நோக்கிக் கதறுங்கள்.*

*''என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?''* (மத் 27:46).

இயேசு தெய்வீகத்தில் பூரணர், மானிடத்தில் முழுமையானவர். இந்த இணைப்பு சிலுவையில் காணப்பட்டதுபோல் அவ்வளவாக வேறெங்கும் தெரிவதில்லை (2 கொரி 13:4). மனிதனோடு அவர் தம்மை முழுக்க முழுக்க அடையாளப்படுத்திக்கொண்டதுதான் நமக்குச் சிந்திக்கச் சிந்திக்கப் பேரூக்கம் தருவதாகும்.

எல்லாச் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் முற்றுப்புள்ளி எனும் ஆசீர்வாதமாகவே மரணம் அமைந்தாலும், அது மனிதன் எவனும் அஞ்சும் எதிரியாகவே இருக்கிறது (1 கொரி 15:26). இறக்க அல்ல, இருக்கவே மனிதன் விரும்புவது கடவுளே அவனுக்குள் வைத்துள்ள சுபாவமாகும் (சங் 118:17). எனவே ''மரண பயம்'' என்பது இயல்பானது; ஆனால் அப்பயத்தின் ''அடிமைத்தனத்திலி ருந்து'' இயேசு நம்மை விடுவிக்கிறார் (எபி 2:15). மரண இருளின் பள்ளத்தாக்கில் நாம் நடக்கும்போதும் அவர் நம்மைத் தாங்கும்படி அவர்தாமே மரணத்திற்கேதுவான துக்கத்தையும் மரணத்தையும் ருசிபார்த்தார் (மத் 26:37,38; எபி 2:9; சங் 23:4).

அவனது வியாதியில் அவன் இறந்துவிடுவானென்று எசேக்கியா அரசனுக்குத் தீர்க்கன் ஏசாயா அறிவித்தபோது அவன் மனங்கசந்து அழுதான். அவனது கண்ணீரைக் கண்ட தேவன் கிருபையாய் அவ னுக்குப் பதினைந்து ஆண்டுகள் கூட்டிக்கொடுத்தார் (ஏசா 38:1-5). நீடிய வாழ்வினால் நம்மைத் திருப்தியாக்குவாரென்பதே தேவனது பொதுவான வாக்காகும் (சங் 91:16). எனவே ''என் தேவனே, பாதி

வயதில் என்னை எடுத்துக்கொள்ளாதேயும்'' என்று நாம் ஜெபிக்க லாம் (சங் 102:24). ஆனால் முடிவற்ற நித்தியத்தோடு ஒப்பிடுகை யில் முப்பதாண்டும் தொண்ணூறாண்டும் ஒன்றுதான். யோவான், இயேசு, யாக்கோபு ஆகியோரெல்லாம் தங்கள் பணியின் உச்சக்கட் டத்தின் காலத்தில் மரித்தனர்; ஆனால் அவர்கள் காலத்திற்குமுன் இறந்துவிட்டனரென்று யார் சொல்லக்கூடும்?

சிலுவையிலிருந்து இயேசு மொழிந்தது பெரும்பாலும் பழைய ஏற்பாட்டு வசனங்களே. வேத வசனத்தை அப்படியே தமது ஜெபமாக் கினார் (சங் 22:1). நமது ஜெபங்கள் அர்த்தமும், நமது துதிகள் கிரு பையும் நிறைந்தவையாய் இருக்கும்படி, நாமும் கிறிஸ்துவின் வசனத் தால் நிறைந்திருக்கும்படிப் போதிக்கப்பட்டுள்ளோம் (கொலோ 3:16). வேதத் தியானத்தோடு வசனத்தை மனனம் செய்தலும் அடங் கட்டும். அப்படியானால் இருள் சூழும் வேளைகளில் பொருத்தமான வசனப்பகுதிகளைத் தூயாவியானவர் நமது நினைவிற்குக் கொண்டு வருவார்.

''இரு காரியங்களை மனிதன் தனிமையாகவே செய்யவேண்டும் — ஒன்று விசுவாசிப்பது; அடுத்தது இறப்பது'' என்றார் மார்டின் லூத் தர். மனிதத் துணையைக் குறிப்பிட்டே அவர் அவ்விதம் கூறினார். ஆனால் கர்த்தரோ, ''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன் னைக் கைவிடுவதுமில்லை ... உலகின் முடிவுவரை நான் உங்க ளுடன் இருக்கிறேன்'' என்று வாக்கருளியுள்ளார் (எபி 13:5; மத் 28:20).

### *5. உங்கள் விருப்பங்களைக் கடத்துங்கள்.*

*''தாகமாயிருக்கிறேன்''* (யோ 19:28).

தங்கள் விருப்பங்களையும், வாஞ்சைகளையும் குடும்பத்தினருக் கும் நண்பருக்கும் சொல்லுமுன்னரே மரணம் பல்லாயிரங்களைக் கொண்டுபோய்விட்டது. மரணமானது திடீரென்றும் எதிர்பாராமலும் வருமென அவர்கள் நினையாதது அதற்கொரு காரணம்.

தேவ மனிதர் பலர் தாங்கள் மரிக்குமுன் பேசியவைகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாய் வேதத்தில் தரப்பட்டுள்ளன. இப்பகுதிகளைப்



படியுங்கள்: ஆதி 49; 50:25,26; உபா 29-34; 2 சாமு 23:1-7; யோ 14-17; அப் 20:17-38; 2 தீமோ 4; முதலியன.

கிறிஸ்தவத் தலைவர்கள் தங்களது ஊழியங்களை வளர்த்துக் கொண்டிருக்கையிலேயே அடுத்த தலைமுறையை ஆயத்தப்படுத்த வேண்டும். இயேசு, பவுல், இன்னும் பல அப்போஸ்தலர் தங்கள் ஊழியத்தின் துவக்கத்திலிருந்தே அடுத்த வரிசையினரைப் பயிற்று வித்தனர் (மத் 4:17-19; அப் 16:1-3). படுத்த படுக்கையாகும்வரை சபை மேய்ப்பரும் பிரசங்கிமாரும் எல்லாவற்றையும் தங்களுக் குள்ளேயே வைத்துக்கொள்வது இறையரசுக்கு எத்தனை இழப்பு! திரள்களைவிடத் தாம் தெரிந்தெடுத்த சிலரோடேயே இயேசு தமது பெரும்பகுதி நேரத்தைச் செலவிட்டார். கிரமமான, அர்த்தமுள்ள உரையாடல்களின்றி நாம் அடுத்த தலைமுறைக்குப் பயனுள்ளவை களை விட்டுச் செல்ல முடியாது. இது விசுவாசத்தின் ஓர் அப்பி யாசமாகும் (எபி 11:22).

தங்கள் பிள்ளைகள் தேவ பக்தியான பாரம்பரியங்களைத் தொடர வும், ஒருவேளை கூழுக்காகத் தங்கள் ஆன்மீகச் சொத்துரிமைகளை விலை பேசிவிடாதபடியும் அவர்களுக்குக் கண்டிப்பாய்ப் போதிக்க வேண்டுமென தேவன் பெற்றோரிடம் எதிர்பார்க்கிறார் (ஆதி 18:19). பிள்ளைகளுக்குச் சொத்துக்களையும் நகைகளையும் பிரித்துக் கொடுக்குமுன் கணிசமான பகுதியொன்றைத் தேவனுக்காய் எடுத்து வையுங்கள். இறையரசின் தேவைகளுக்காய் வைப்புத்தொகைகள் முதலீடு செய்யுங்கள். இதோ சாலொமோனின் ஞானத்தைக் கேளுங் கள்: ''சூரியனுக்குக் கீழே நான் கண்ட கொடிய தீங்குமுண்டு: அதா வது, பணமானது அதை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படிச் சேகரித்து வைக்கப்படுவதாம் ... நிர்வாணியாய் வந்தான்; வந்தது போலவே நிர்வாணியாய்த் திரும்பிப் போவான்'' (பிர 5:13-15).

கண்கள் மற்றும் அதுபோன்ற நமது உறுப்புகள் பிற மனிதரின் வாழ்வை ஒளியாக்கவும், நீடிக்கவும் உதவும். விண் செல்லும் நீங்கள் கண்ணை மண்ணுக்குள் புதைப்பானேன்? உங்களுக்கருகிலுள்ள உறுப்பு தான நிலையங்கள் மற்றும் அதுபோன்ற நிறுவனங்களில் பதிவு செய்யுங்கள்; நீங்கள் இறந்தவுடன் என்ன செய்யவேண்டு

மென்று உங்கள் குடும்பத்தினருக்குத் தெளிவாகச் சொல்லி வையுங்கள். இறையரசுச் சிந்தையுள்ளோர் அலங்காரக் கல்லறைகள் கட்டுவதில் பணத்தை வீணடிக்கமாட்டார். தனக்குக் கல்லறையேதும் வேண்டாம்; தன்னைப் புதைக்குமிடத்தில் பறவைகள் குளிக்கவும் குடிக்கவும் சிறிய தொட்டியொன்று மட்டும் அமைக்கவேண்டுமென சீரிய மிஷனரி அம்மையார் ஏமி கார்மைக்கல் தனது உடன் ஊழியரிடம் கூறி மரித்தார்கள். புதைத்தாலும் எரித்தாலும் எல்லாம் ஒன்றுதான். ஆவி தன்னைத் தந்த தேவனிடம் செல்லும்; உடலோ மண்ணுக்கு மண்ணாகவும் சாம்பலுக்குச் சாம்பலாகவும் போய்விடும் (பிர 12:7). மறுமணம் செய்யாதே என்றெல்லாம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் சொல்லாதிருங்கள் (மத் 22:23-33; ரோ 7:2). யாரை மணக்க வேண்டுமெனப் பேரனுக்குக் கட்டளை கொடுக்காதிருங்கள்!

### *6. வேலையை முடிப்பதில் கருத்தாயிருங்கள்.*

*''முடிந்தது!''* (யோ 19:30).

நமக்குக் கொடுக்கப்பட்ட வேலை எதுவாயினும் அதை நாம் முடித்துவிட தேவன் எதிர்பார்க்கிறார். அவரது ஞானம் நமக்குப் போதுமான காலமும் பலமும் அளித்துள்ளது. பிதா தமக்குக் கொடுத்த வேலையைச் செய்து முடித்துவிட்டதாய்ச் சிலுவைக்குச் செல்லும் முன்னரே இயேசு சாட்சி பகர்ந்தார் (யோ 17:4). மிஷனரி பவுலின் சாட்சியும் அதுவே: ''ஓட்டத்தை முடித்தேன்'' (2 தீமோ 4:7). இவ்விதம் பணியைச் செய்து முடிப்பதற்குச் சில தத்துவங்கள் உண்டு —

☐ ஒன்றையும் காலம் தள்ளிப்போடாதீர்கள்! ''நாளையைக் குறித்துப் பெருமையடிக்காதே; ஒரு நாள் பிறப்பிப்பதை அறியாயே'' (நீதி 27:1). சுறுசுறுப்பாயிருங்கள். கடின உழைப்பாளியாயிருங்கள்.

☐ அளவுக்குமீறி வேலைகளை ஏற்றுக்கொள்ளாதீர்கள்! உங்கள் வரம்புகளை அறிந்திருங்கள். எல்லாவற்றையும் செய்துவிட முயல வேண்டாம். முக்கியமானவைகளை வரிசைப்படுத்துங்கள். தேவன் உங்களுக்களித்த வரங்கள் மற்றும் ஏதுக்களுக்கு மிஞ்சிச் செயல் படாதீர்கள் (ரோ 12:3; 2 கொரி 10:14,15; பிர 3:10,11).

☐ தனிப் பாடகராயிருந்துவிடாதீர்கள்! பொறுப்புகளைப் பகிர்ந்து கொடுங்கள். இன்னும் சிலர் சேர்ந்து வேலை செய்யட்டும் (மத் 26:19; எபே 4:16).



☐ பூரணவாதியாயிராதீர்கள்! நமது வேலை அழகாகவும் அம்சமாகவும் இருக்கவேண்டுமென்பது உண்மைதான். ஆனால் எங்கோ ஓரிடத்தில் நிறுத்தவேண்டும். ஏனெனில் கடவுள் செய்வதைத் தவிர யாவுமே பூரணமற்றவைதான். பூரணவாதிகள் தங்களை மட்டுமல்ல, மற்றவர்களையும் ஒன்றுமில்லாமலாக்கிவிடுவார்கள் (பிர 7:16). அவர்கள் சாதிப்பதும் அதிகமிராது.

☐ திசை மாறாதீர்கள்! உங்கள் அழைப்பில் நிலைத்திருங்கள். மான் வேட்டைக்குப்போய் முயலடித்த கதை வேண்டாம். சில்லறைக் காரியங்கள்தான் நமது சத்தையெல்லாம் உறிஞ்சிவிடும். ''உங்களுக்கு இரு நோக்குகளிருந்தால் ஒன்று அதிகம்'' என்றார் ஒருவர்! ''தாவீது தன் காலத்தில் தேவ சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்தபின் நித்திரையடைந்தான்'' (அப் 13:36).

### *7. எதைக் குறித்தும் கலங்காதிருங்கள்.*

*''பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்''* (லூக் 23:46).

*நீர் என்னை நடத்தும் பாதை எல்லாம்*
*விண் எட்டும் ஏணிபோல் விளங்குமாம்;*
*தூதர் அழைப்பாரே, உம்மண்டை கர்த்தரே,*
*நான் சேரவே!*

''நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்றே மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்'' (ரோ 14:8). நாம் மரிக்கும் நேரத்தை நியமிப்பவர் தேவனே (யோ 19:10,11). குறித்த காலத்திற்குமுன் நாம் மரிப்பதில்லை. ''என் ஆத்துமாவே, ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? ... காலங்கள் அவர் கரத்தில் அல்லவோ இருக்கின்றன?'' (சங் 42:11; 31:14,15).